# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අதி விசேஷமானது

අංක **2417/30 - 2025 ජනවාරි මස 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.01.02**

2417/30 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: MO/TW/LND/08/06.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4 - 3/5/2013/HW/566.

போதாகம, ஹம்பேகமுவ, கல்தொட்ட போக்குவரத்துப் பாதையில் இல. 41/1 பாலத்தின் நிர்மாண வேலைகள் தொடர்பாக கீழே குறிக்கப்பட்டுள்ள காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

**அட்டவணை 1**

ஊவா மாகாணம், மொணராகலை மாவட்டம், தணமல்வில பிரதேச செயலாளர் பிரிவில் இல. 149C கொட்டவெஹெரமங்கட கிராம அலுவலர் பிரிவில் கொட்டவெஹெரமங்கட கிராமத்தில் அமைந்துள்ள முதற்சுவட்டு வரைபட இல. C. M 720289 வலயம் II, தாள் இல. 2 இல் காட்டப்பட்டுள்ள காணித் துண்டுகள் பின்வருமாறு :

1. துண்டு இல. 102
காணியின் பெயர்: கொட்டவெஹெரமங்கட கெலே; உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 0.0037 ஹெக்டயார்.

2. துண்டு இல. 103
காணியின் பெயர்: கொட்டவெஹெரமங்கட கெலே; உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 0.0250 ஹெக்டயார்.

3. துண்டு இல. 104
காணியின் பெயர்: கொட்டவெஹெரமங்கட கெலே; உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 0.0013 ஹெக்டயார்.

4. துண்டு இல. 105
காணியின் பெயர்: - ; உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 0.0034 ஹெக்டயார்.

5. துண்டு இல. 107
காணியின் பெயர்: - ; உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 0.0088 ஹெக்டயார்.

**அட்டவணை 2**

ஊவா மாகாணம், மொணராகலை மாவட்டம், தணமல்வில பிரதேச செயலாளர் பிரிவில் கோன்கல பின்தென்ன கோறளை சிறு பிரிவில் கொட்ட வெஹெரமங்கட கிராமத்தில் அமைந்துள்ள உள்ளக வரைபட இல. 67, முதற்சுவட்டு வரைபட இல. 62, பத்திரிகை இல. 60 இல் காட்டப்பட்டுள்ள காணித் துண்டு பின்வருமாறு :

**1. துண்டு இல. 1562**

காணியின் பெயர்: கொட்டவெஹெரமங்கட கெலே; உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 230.0596 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு தணமல்வில பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு மாசி மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே. எச். ஏ. கெலும் நிஷாந்த,
பிரதேச செயலாளர்,
தணமல்வில.

பிரதேச செயலகம்,
தணமல்வில,
2025, பெப்புருவரி 05.

EOG 01 - 0013

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: தவில/3/1/2/31 (MO/TW/LND/08/05).

கிருந்தி ஓயா கருத்திட்டம் தொடர்பாக காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ், இல. 991/12 மற்றும் 1997.09.03 ஆந் திகதிய புதன்கிழமை, அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் அறிவிக்கப்பட்டுள்ள நட்டஈட்டுப் பரிசீலனைத் திகதி 1997, திசெம்பர் 24 ஆந் திகதி மு. ப. 10.30 என்பது 2025, பங்குனி மாதம் 20 ஆந் திகதி மு. ப. 10.30 எனவும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய திகதியாக குறிப்பிடப்பட்ட திகதி 1997 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆந் திகதி என்பது 2025 ஆம் ஆண்டு மாசி மாதம் 21 ஆந் திகதி எனவும் மாற்றம் செய்யப்படவுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

கே. எச். ஏ. கெலும் நிஷாந்த,
பிரதேச செயலாளர்,
தணமல்வில.

பிரதேச செயலகம்,
தணமல்வில,
2025, பெப்புருவரி 05.

EOG 01 - 0014

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.